**கட்புல அரங்காற்றல் கலைகள் பல்கலைக்கழகம் - 2024**

---------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுகள

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்புல அரங்காற்றல் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107 (5) உப பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனது அறிக்கையில் 1.5 பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களை தவிர்ந்து பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயவெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்களுக்கு இணங்காதிருத்தல்

| தொடர்புடைய நியமத்திற்கான குறிப்புடன் இணங்காதிருத்தல் | முகாமைத்துவத்தின் அபிப்பிரயாம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்கள் 07 இன் பந்தி 65 இன் படி, நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படாததால், ரூபா.**742,035,590** செலவு கொண்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (PPE) முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்டிருந்தபோதிலும் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்தன. அதன் விளைவாக ஏற்பட்ட மதிப்பீட்டுப் பிழையானது இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்கள் 03 இன் படி திருத்தியமைக்கப்படவில்லை. | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் 2023 திசம்பர் 15 அன்று வெளியிடப்பட்ட தெளிவுபடுத்தல்களுக்கு அமைய, ஏற்கனவே பூஜ்ஜிய ஏட்டுப் பெறுமதி கொண்ட பொருட்கள் தொடர்ந்து அவ்வாறே பேணப்படலாம் என்றும், அதன்படி நிதிக் கூற்றுக்களில் பூஜ்ஜிய ஏட்டுப் பெறுமதியாக வெளிப்படுத்தல் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அறியத்தரப்படுகிறது. | கணக்கியல் நியமங் களின்படி செயற்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கியல் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சங்கீதம் மற்றும் நடனப் பீடக் கட்டிடத்தின் கட்டுமான தாமதத்தின் காரணமாக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட தாமதக் கட்டணம் ரூபா.40,750,130 நட்டமாக இருந்தபோதிலும், அது கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டதன் விளைவாக, அதன் மீதி அந்தத் தொகையினாலும், அத்துடன் கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் மிகைப்பற்று முறையே ரூபா.28,734,873 மற்றும் ரூபா.11,015,257 இனால் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்கள் 07 இன் பந்தி 35 இல், ஒரு சொத்தின் செலவைக் கணிப்பிடும்போது, சாதாரண கடன் நிபந்தனைகளுக்கு அப்பால் பணம் செலுத்துதல் தாமதமாகும்போது, ரொக்கக் கொள்முதல் விலைக்கும் மொத்த கொடுப்பனவுகளுக்கும் இடையிலான வேறுபாடானது இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்கள் 04 இன் படி மாற்று வழிமுறையைப் (Alternative Treatment) பயன்படுத்தினால் அன்றி, குறித்த செலவினம் வட்டிச் செலவாக இனங்காணப்படுதல் வேண்டும். இதன்படி, அனுமதிக்கப்பட்ட மாற்று வழிமுறையின் கீழ் ரூபா.40,750,130 ஆக இருந்த வட்டிச் செலவு மூலதனமயமாக்கப்பட்டுள்ளது | சரியாகக் கணக்கிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (ஆ) | நீண்ட காலம் தொடக்கம் இருந்து வரும் சீராக்கப்படாத மூலதன முற்பணக் கணக்கில் ரூபா.2,759,624 ஆன மீதி உரிய அட்டவணை மற்றும் விபரமான தகவல் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நீண்ட நாட்களிலான நிலுவை களை அடையாளம் காணப்பட்டு தேவையான செவ்வைப்படு த்தல்களை மேற்கொள்வத ற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் |

### 1.6 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்தப்பட வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் உள்ள ரூபா.4,709,495 கொண்ட புலமைப்பரிசில் கணக்கின் மீதிக்கு உரிய மாணவர்களை அடையாளம் கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சீரமைப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | பழைய மீதிகளை அடையாளம் கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செலுத்தப்பட வேண்டிய ஏனைய செலவுகள் என கடந்த ஆண்டில் இனங்காணப்பட்ட ரூபா.11,536,153 கொண்ட மீதியானது, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆராய்ச்சி கருத்தரங்குகள் மற்றும் தொடர்புடைய மாநாடுகளுக்காகப் பெறப்பட்ட பணங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய மேலதிக செலவுகளை இனங்காண்பதற்காக, சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் பீடங்களிடமிருந்து உறுதிப்படுத்தல் கடிதங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன என்றும், அந்தக் கடிதங்கள் கிடைத்தவுடன் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறியத்தரப்படுகிறது. | -அதே- |

**1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் முகாமைத்துவ முடிவுகள் போன்றவற்றுக்கு இணங்காதிருத்தல்**

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றிற்கான குறிப்பு | இணங்காதிருத்தல் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதியியல் ஒழுங்குவிதிகள் கோவையின் 103, 104 | உள்ளக கணக்காய்வு அறிக்கைப்படி வெளிப்படுத்தப்பட்ட, சுமார் ரூபா.1,097,359 பெறுமதியான 3,940 நூலகப் புத்தகங்கள் காணாமல் போனமைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 01/2022 இன்படி, தற்போது 2024 ஆம் ஆண்டுக்கான இருப்புப் பட்டியல் கணக்கெடுப்பு (Inventory Count) மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அதன் மூலம் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளில் இருந்த பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்கும், சம்பந்தப்பட்ட காணாமற்போனமைக்கு பொறுப்பானவர்களை அடையாளம் காணுவதற்கும், நிதியியல் ஒழுங்குவிதிகளின்படி நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அறியத்தரப்படுகிறது. | காணாமற் போனமை குறித்து விசாரணை செய்து, பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து நட்டத்தை அறவிட (மீளப் பெற) நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதியிடப்பட்ட இல. 03/2022 தேசிய வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பந்தி 03 (viii) | அமைச்சரவையால் அங்கீகரிக்கப்படாத நலன்புரித் திட்டங்களுக்காகச் செய்யப்படும் ஒதுக்கீடுகள் நிறுத்தப்பட வேண்டிய போதிலும், அங்கீகாரம் | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட இல. 01/2020 அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 2020 ஒக்டோபர் 13 | சுற்றறிக்கை-யின்படி செயற்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இன்றி ஊழியர் நலன்புரித் திட்டமாக அமுல்படுத்தப்பட்டிருந்த ஊழியர் மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்காக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா.1,836,125 செலுத்தப்பட்டிருந்தது. | ஆம் திகதியிடப்பட்ட இல. 07/2020 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதி சுற்றறிக்கை ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் காப்புறுதி வசதி வழங்கப்படுகிறது. அதற்காக, பல்கலைக்கழகமும் ஊழியரும் முறையே 59% மற்றும் 41% வீதத்தை வழங்குகின்றனர் இதற்காக நிதிக் குழுக்கள் மற்றும் ஆளுகை சபையின் அங்கீகாரங்கள் பெற்று, பல்கலைக்கழகத்தில் உள்ள தகவல் தொடர்பு கோபுரங்கள் (Communication Towers) மூலம் வருமானம் ஈட்டப்படுகிறது. | |
| (இ) | 2023 சனவரி 18 ஆம் திகதியிடப்பட்ட இல. BD/HRD/126/214/19/2023 கொண்ட திறைசேரி சுற்றறிக்கையின் பந்தி 05 | பிணைமுறிகளை (Bonds) மீறியதன் மூலம் ஒரு ஆசிரியரிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா.970,068 ஐ திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிணைமுறிகளை மீறிய ஆசிரயிர்களிடமிரந்து அறவிடப்பட்ட பணம் விசேட நிதி (Restricted Funds) ஒன்றின் கீழ் பேணப்பட்டு வருகிறது. | -அதே- |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் செயற்பாட்டு விளைப்பயன் ரூபா.103,407,441 குறைபாடாக காணப்பட்டதுடன், அதற்குரிய கடந்த ஆண்டின் குறைபாடு ரூபா.65,562,142 ஆக இருந்தது. இதன்படி, நிதிசார் விளைபயன் ரூபா.37,845,299 இனால் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இந்தப் பின்னடைவுக்கு அரசாங்கத்தின் மூலதன மற்றும் மீள்வரும் மானியங்கள் குறைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா.1,022,650,000 பெறுமதியான 03 காணித் துண்டுகளை (Land Parcels) சட்ட ரீதியாகப் பொறுப்பேற்கும் (சுவீகரிக்கும்) நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.. | மூன்று காணித் துண்டுகளில் ஒரு துண்டின் உரிமையைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளதுடன், ஏனைய இரண்டு காணித் துண்டுகளின் உரிமைகளைப் பெறும் எதிர்பார்ப்பில் உள்ளது. இதற்காகச் சட்டப் பிரிவு உரிய அரச நிறுவனங்களுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. | சட்ட ரீதியான உரிமையை பொறுப்பேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் நடனப் பீடத்திற்காகக் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட ஒரு கட்டிடத்திற்காக, 02 வருடங்களுக்கான வாடகை உட்பட ஏனைய ஆரம்பச் செலவுகளுடன் சேர்த்து மொத்தமாக ரூபா.116,845,954 செலவிடப்பட்டிருந்தது. ஒரு வருட காலத்தின் பின்னர், அதிகளவான மேளச் சத்தம் தொடர்பாகப் பிரதேசவாசிகளால் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் காரணமாக 02 வருடங்களின் பின்னர் ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பல்கலைக்கழகத்தின் தேவை குறித்து முறையான சாத்தியக்கூற்று ஆய்வு (Feasibility Study) மேற்கொள்ளப்படாமல் இந்தக் கட்டிடம் குத்தகைக்கு எடுக்கப்பட்டதன் காரணமாக, அறைகளைப் பிரித்தல் (Partition), தரை விரிப்பு (Carpeting) இடுதல் போன்ற கட்டிடத்தைச் சாதகமான நிலைக்குக் கொண்டுவரச் செய்யப்பட்ட ரூபா.28,726,084 செலவு பயன் அற்றதாகிவிட்டது . அத்துடன், அக் கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்ட ரூபா.1,050,000 பெறுமதியான 27 Exhaust Fan கள் மற்றும் 06 குளிரூட்டிகள் (Air Conditioners) பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட தெஹிவளை வளாகத்திலுள்ள கட்டிடத்தை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஏற்ற நிலைக்குக் கொண்டுவர, அறைகளைப் பிரித்தல் (Partition) மற்றும் தரை விரிப்பு (Carpeting) இடுதல் போன்ற வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. அதிலிருந்து வெளியேறிய போது, அந்தத் தரை விரிப்புகள் மீண்டும் நடனம் மற்றும் நாடகக் கலைப் பீடத்தில் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டன. அத்துடன், அறைகளைப் பிரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட Partition பகுதிகள் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு கொண்டுவரப்பட்டுப் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தப்பட்டன. கட்டிடத்தைச் சாதகமான நிலைக்குக் கொண்டுவரச் செய்யப்பட்ட செலவு பயன் அற்றதாகவில்லை. அத்துடன், குளிரூட்டிகள் (Air Conditioners) கொண்டுவரப்பட்ட பின்னர் செய்யப்பட்ட தரப் பரிசோதனையின்படி, அவை செயற்திறன் கொண்ட நிலையில் இல்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. | முறையான சாத்தியக் கூற்று ஆய்வுகள் (Feasibility Study) மேற்கொள்ளப் பட்ட பின்னரே வளங்களை பயன்படுத்தல் வேண்டும். |